ஜனாதிபதித் தேர்தல் 2015 தொடர்பான அறிக்கை

ஜனவரி 8, 2015 அன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனா அவர்களின் வெற்றியை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) வரவேற்கிறது. ஜனாதிபதி சிறிசேனாவை அவரது பதவியிலும், மற்றும் குறிப்பாக அவரது 100 நாள் சீர்திருத்தத் திட்டத்தின் அமுல் படுத்தலுக்குக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

பல்வேறு காரணங்களுக்காக தேர்தல் முக்கியமானதாக இருந்தது. பதவியிலுள்ள ஒரு ஜனாதிபதி மூன்றாம் தவணைக்காக தேர்தலில் போட்டியிட்டமை, இதுவே முதற் தடவையென்பதுடன் அவருக்கு எதிராக, ஜாதிக ஹெல உறுமய ஒரு முனையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றொரு முனையிலுமாக எங்கள் வரலாற்றில் அரசியல் சக்திகளின் மிகப் பரந்ததான ஒரு கூட்டணி அணிவகுத்தது. நாடு முழுவதிலுமாக முன்னொரு போதுமில்லாத வாக்காளர் வருகையுடனான தேர்தலொன்றில், ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் பதவியிலுள்ள ஜனாதிபதி தோற்கடிக்கப்பட்டதும், இதுவே முதற் தடவையாகும். இந்த வரலாற்று வெற்றி நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் ஒழிப்புக்கு அல்லது குறைந்தபட்சம் அதில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் ஒரு கணிசமான குறைத்தலுக்குமாவது இட்டுச் செல்லும் என நாம் நம்புகிறோம்.

பரப்புரைக் காலம் முழுவதும் மற்றும் தேர்தல் தினத்தன்றும் கூட அரச வளங்களின் அப்பட்டமான துஷ்பிரயோகம், மிரட்டல்கள் என்பவற்றை எதிர்த்து, இலங்கை மக்கள் அனைவரினதும் வெற்றியைக் கட்டமைத்த அது, ஜனநாயகத்தின் வெற்றி என்பதால், தேர்தல், விசேட முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது. ஜனநாயகச் செயன் முறைகளிலான அவர்களது நம்பிக்கையை மீளுறுதிப்படுத்தியமை மற்றும் எங்களது நிறுவனங்களின் பலம் மற்றும் நம்பிக்கையை மீள்நிலைநாட்டியமை என்பவற்றுக்காக எங்களது சக பிரஜைகளுக்கு நாம் சிரம் வணங்குகிறோம். தேர்தலின் முக்கியமான தருணங்களில் தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் செயன்முறைகளின் நம்பகத்தன்மையின் உறுதியான பாதுகாத்தல் மற்றும் அதேபோன்று, ஜனநாயகத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படும் முயற்சிகளின் பின்னணியில், ஆயுதப் படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் அவரது அதிகாரிகள் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர்களின் வகிபாகங்களையும் நாம் விசேடமாக அங்கீகரித்து பாராட்டுகிறோம். இவை தனிப்பட்ட துணிச்சல் மற்றும் நேர்மை என்பவற்றின் செயற்பாடுகளாகும், அத்தோடு, அவை எங்களது ஜனநாயகத்தின் நிறுவன ரீதியானதும் மற்றும் நடைமுறை ரீயானதுமான அடித்தளங்களை உறுதிப்படுத்துவதன் முக்கிய தேவையையும் நினைவுபடுத்துகிறது.

தேர்தல் ஒரு வெற்றிடத்தில் நடைபெறவில்லை என்பதை மா.கொ.நி அவதானிக்கிறது. முன்னைய ஆட்சியின் சர்வாதிகாரத்திற்கு எதிராக எழுவது அச்சுறுத்தலளிப்பதாகவும் மற்றும் நடைமுறையில் இல்லாததாகவும் சொல்லப்பட்ட ஒரு காலத்தில், அவற்றை மேற்கொண்டவர்களுள் சில தனிப்பட்டவர்களும் மற்றும் நிறுவனங்களும் உள்ளன என்பதுடன் அவற்றுள் சில தங்களது ஜனநாயக நம்பிக்கைகளுக்காக தங்களது உயிரையும் மற்றும் வாழ்வாதாரங்களையும் அவற்றுக்கு விலையாகக் கொடுத்துள்ளனர். சக பிரஜைகளாக அவர்களது நியாயத்தை நிலைநாட்டுவதை முன்னெடுத்துச் செல்கையில் அவர்களுக்கு நாம் சிரம் வணங்குகிறோம். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் மற்றும் அவை தொடர்பிலான பொறுப்புக்கூறலுக்காக நின்றவர்கள், காணாமற் போனவர்களின் குடும்பங்கள், சிலாபம், சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் ரத்துப்பஸ்வெல என்பவற்றில் தங்களது அடிப்படை, ஜனநாயக உரிமைகளின் அப்பியாசித்தலுக்காக தங்கள் உயிர்களை ஈந்தவர்கள், லசந்த விக்கிரமத்துங்க மற்றும் பிரகீத் எக்னலிகொடையிலிருந்து நிமலரூபன் வரை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எண்ணற்றவர்களுடன் இன்னமும் துன்புறும் ஜெயக்குமாரி, விரும்பத்தகாத பதினெட்டாவது திருத்தம் மற்றும் சட்ட விரோத மற்றும் அரசியலமைப்பு

ரீதியில் இல்லாத அரசியல் குற்றச்சாட்டின் மூலமாக நீதியரசரை அகற்றியமை என்பவற்றை எதிர்த்தவர்கள், மற்றும் கயமைத்தனமான மதச் சகிப்புத்தன்மையின்மையின் பாதிப்புகளைத் தாங்கியவர்கள் மற்றும் ஊழல்களை வெளிப்படுத்தியவர்களென இவர்கள் அனைவருக்கும், நாம் ஒரு பெரும் நன்றிக்கடன் கொண்டுள்ளதோடு அதனை நாம் அங்கீகரிக்கிறோம்.

அவர்கள் எங்களைப் பயங்கரவாதிகள், துரோகிகள் மற்றும் திருடர்கள் எனக் கூறினர்; நாங்கள் எங்களை பிரஜைகள் என அழைத்துக் கொள்கிறோம்.

நாங்கள் இன்னமும் அவ்வாறே செய்கிறோம், செய்தலும் வேண்டும். தனது மக்கள் அனைவரினதும் அபிலாஷைகளைச் செயற்படுத்தும் ஜனநாயகமாக எங்கள் நாடு வருவதற்கும் மற்றும் அவ்வாறிருப்பதற்குமான சந்தர்ப்பம் இதுவாகும். எந்தவொரு நாட்டினதும் ஜனநாயக வாழ்விலும் சிவில் சமூகங்களின் வகிபாகத்தை நாம் மறந்து விடாதிருப்போம், அது எப்போதானதாக இல்லையென்பதுடன், அது அவ்வாறாக இருக்கவும் முடியாது.